தலைப்பு – 266 வவுனியா மாவட்டச் செயலகம் -2024

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 266 – வவுனியா மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் வவுனியா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வவுனியா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் வவுனியா மாவட்ட செயலகத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை வவுனியா மாவட்ட செயலகம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வருமானம் அல்லாத பெறுவனவு

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
மீளாய்வாண்டில் வாகனங்களின் விற்பனை வருமானம் ரூபா 451,700 காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் உள்ளடக்குவதற்குப் பதிலாக செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தமையினாலும் மற்றும் ஏனைய இருப்பு பொருட்கள் விற்பனை வருமானம் ரூபா 275,927 ஆனது நிதிக்கூற்றுக்களில் ரூபா 107,927 ஆக வெளிப்படுத்தப்பட்டிருந்தமையினாலும் செயற்பாட்டு நடவடிக்கையின் தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 451,700 ஆல் அதிகரித்தும் முதலீட்டு நடவடிக்கையின் தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 619,700 ஆல் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.	நிதிக்கூற்று தயாரித்தலின் போது ஏற்பட்ட தவறான உள்ளீடு காரணமேயாகும் அத்துடன் ரூபா 168,000 ஆனது தவறுதலாக வருமானக் குறியீடு 2003-99-00 இல் உள்வாங்கப்பட்டு நிதிக்கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளிருந்தான ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட காசுப்பாச்சலின் வருமானமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம் பெறாமல் உரிய முறையில் தரவுகளை உள்ளீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்து விற்பனையிலிருந்து பெறப்பட்ட தொகை காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் காட்டப்படல் வேண்டும்.

(ஆ) மூலதனச் செலவினங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தினால் ரூபா 244,750 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஏர் கண்டிஷனர் மற்றும் கனணிகள் உரிய மூலதன சொத்துக்களின் கொள்வனவுக்குரிய வாக்குப்பணம் 266-1-1-0-2103 இன் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருக்காமல் மூலதன சொத்துக்களின் புணரமைப்பு, மேம்படுத்தல் செலவினங்களுக்குரிய வாக்குப்பணம் 266-1-1-0-2002 இன் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம் பெறாதவாறு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	நிலையான சொத்து கொள்வனவு மூலதன சொத்துக்களின் கொள்வனவுக்குரிய வாக்குப்பணத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதற்கேற்றவாறு நிதிக்கூற்றுக்கள் திருத்தப்பட வேண்டும்.

(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	மீளாய்வாண்டில் பௌதீக சொத்துக்களின் கொள்வனவானது நிதி செயலாற்றுகைக் கூற்றில் ரூபா 20,211,668 ஆகவும் நடைமுறையல்லா சொத்துக்களின் திறைசேரி அச்சுப்பதிவில் (SA - 82) ரூபா 13,321,341 ஆகவும் காணப்படுகின்றமையால் ரூபா 6,890,327 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	திறைசேரியின் CIGAS பொதிமுறையில் உள்ள பௌதீக சொத்துக்களை உள்வாங்கும் தொழிநுட்ப குறைபாடாகவே இனங்காணப்படுகின்றது.	நிதி செயலாற்றுகைக் கூற்றிற்கும் திறைசேரி அச்சுப்பதிவிற்கும் இடையிலான வேறுபாடுகளை சரிசெய்து முறையாக இணக்கம் செய்யப்படல் வேண்டும்.
(ii)	வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் வாகனங்களின் பெறுமதி ரூபா 12,600,000 பொறி, இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் வாகனங்களின் பெறுமதி குறித்த தொகையினால் குறைத்தும் பொறி, இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பெறுமதி குறித்த தொகையினால் கூட்டியும் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் 2022 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகத்தில் அகற்றப்பட்ட 2670 சதுர அடி உடைய கட்டடத்தின் கிரயமானது நிதியல்லாச் சொத்துக்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.	திறைசேரியின் அனுமதியைப் பெற்று உரிய சொத்துக் குறியீட்டின் கீழ் பிரித்து உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சொத்துக்கள் உரிய சொத்து வகைப்படுத்தலின் கீழ் வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அகற்றப்பட்ட சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்யப்படல் வேண்டும்.

(ஈ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களில் திசெம்பர் 31 இல் உள்ளடக்கப்பட்டுள்ள 25 எண்ணிக்கையான வாகனங்களின் ரூபா 45,919,724 பெறுமதியினை உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்துமூல ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னரே பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது அதற்குரிய ஆவணங்களை பதிவேட்டு அறையில் தேடி சமர்ப்பிக்க கால அவகாசம் தேவைப்படுவதால், கூடிய விரைவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதிகளை உள்ளடக்கும் போது குறித்த பெறுமதி பெறப்பட்ட அடிப்படை தொடர்பான எழுத்துமூல ஆவணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) இந்த அறிக்கையில் 1.6.1(இ)(ii) பந்தியில் குறிப்பிடப்பட்ட கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3 நிதி மீளாய்வு

3.1 பொறுப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்குட்படல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 16 ஆம் திகதிய 06/2024 இலக்கம் கொண்ட அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான வழிகாட்டல் 03 இன் பந்தி 3.3 இன் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கடப்பாட்டு இலக்கத்திற்கு அமைவாக வெளிப்படுத்தப்படாத 5 விடயங்களுக்கான ரூபா 376,282 இற்கான பொறுப்புக்கள் 2025 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்தது.	மாவட்டச் செயலகத்திற்குரிய திசெம்பர் மாதத்திற்கான மின்சாரப் பட்டியல் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் பொறுப்புக்களை உள்ளீடு செய்யவேண்டிய இறுதி திகதிக்கு முன்னர்கிடைக்காத காரணத்தினாலும் ஏனைய இரண்டு மீண்டெழும் செலவினங்களும் நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தினாலும் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் பொறுப்புக்காக உள்ளீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இனிவரும் காலங்களில் குறித்த மாதத்திற்குரிய பற்றுச் சீட்டினைப் பெற்று குறித்த மாதத்திலேயே கொடுப்பனவுகளை மேற்கொள்ளவோ அல்லது பொறுப்புக்கூறல் கடப்பாட்டுக்குள் வெளிப்படுத்தவோ ஏதுவான நடவடிக்கை எடுக்கப்படும்.	ஒதுக்கீடு மட்டத்திற்கு மேலதிகமாக பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதை தவிர்க்க வேண்டும்.

3.2 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டில் 5 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 4 திணைக்களங்களால் மீண்டுவரும் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் கூட்டுமொத்தம் ரூபா 29,343,395 ஆனது 20 சதவீதம் தொடக்கம் 41 சதவீதம் வரை பயன்படுத்தப்பட்டிராது சேமிப்பாக காணப்பட்டிருந்தது.	10.01.2024 ஆம் திகதிய 01/2024ம் இலக்க வரவு செலவு திட்ட சுற்றுநிருபம் மற்றும் மற்றும் ஆட்சி மாற்றத்தின் பின் அனுமதிக்கப்பட்டிருந்த கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாது இடைநிறுத்தப்பட்டமை என்பவற்றின் காரணமாக குறித்த தொகை சேமிப்பாக காணப்படுகின்றது. இவை குறித்த அமைச்சுக்களினால் மீளப் பெற்றுக்கொள்ளப்படாதுள்ளமை காரணமாக தொடர்ந்தும் எமது கூற்றுக்களில் பதிவாகக் காட்டப்பட்டிருந்தது.	வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளை முழுமையாக பயன்படுத்தி பிரதேசத்தின் அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் விதத்தில் கருத்திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் 4 ஏனைய அமைச்சுக்களால் மூலதனச் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் கூட்டுமொத்தம்ரூபா 225,945,658 ஆனது 21 சதவீதம் தொடக்கம் 87 சதவீதம் வரை பயன்படுத்தப்பட்டிராது சேமிப்பாக காணப்பட்டிருந்தது.	10.01.2024 ஆம் திகதிய 01/2024ம் இலக்க வரவு செலவு திட்ட சுற்றுநிருபம் மற்றும் மற்றும் ஆட்சி மாற்றத்தின் பின் அனுமதிக்கப்பட்டிருந்த கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாது இடைநிறுத்தப்பட்டமை என்பவற்றின் காரணமாக குறித்த தொகை சேமிப்பாக காணப்படுகின்றது. இவை குறித்த அமைச்சுக்களினால் மீளப் பெற்றுக்கொள்ளப்படாதுள்ளமை காரணமாக தொடர்ந்தும் எமது கூற்றுக்களில் பதிவாகக் காட்டப்பட்டிருந்தது.	-மேற்படி-

3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம்பெற வேண்டிய	நிதிக்கட்டுப்பாட்டுக்கு இலகுவான முறைமை ஒன்றை தயாரிப்பதுடன் அம்முறைமையினால் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பான காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கு ஒரு உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமை ஒன்று விரைவாக என்னால் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

போதிலும், அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி	இணங்காமைகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை**				
	(i) XIX இன் பிரிவு 1		மாவட்டச் செயலகத்தின் கீழ் காணப்படும் அனைத்து அரச இல்லங்களும் வதிவிட நோக்கத்திற்குரிய இல்லங்களாக காணப்படுகின்ற நிலையில் 04 எண்ணிக்கையான இல்லங்களினை வதிவிட நோக்கத்திற்கு காத்திருப்போர் பட்டியலில் காணப்படுகின்றவர்களுக்கு வழங்காது அலுவலக நோக்கத்திற்காக வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	மாவட்ட செயலகத்தின் கீழ்க் காணப்படும் அரச இல்லங்கள் அனைத்துமே வதிவிட நோக்கத்திற்குரியவையாகும். ஏதாவது ஒரு அரச விடுதியில் யாதாயினும் ஒரு காரணத்திற்காக உத்தியோகத்தர்கள் எவரும் குடியிருக்க விரும்பம் தெரிவிக்கப்படாதவிடத்து அரச செலவினங்களைக் குறைப்பதற்காகவும் வேறு அரச திணைக்களங்களிற்கு போதிய அரச கட்டடங்கள் காணப்படாதவிடத்து மக்கள் சேவையை அதிகரிப்பதற்கு குறித்த திணைக்களங்களின் வேண்டுகோளுக்கு அமைவாக எமது அமைச்சின் அனுமதியுடன் அரச இல்லங்கள் வழங்கப்படுகின்றது	தாபன விதிக் கோவையின் பிரகாரம் அரச இல்லங்கள் பயன்பாட்டின் நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட வேண்டியதுடன் அவை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

	(ii) XIX இன் பிரிவு 6:1	395,200	2011 மே 13 ஆம் திகதி பயங்கரவாத விசாரணை திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த வவுனியா மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான அரச இல்லமானது குத்தகைக் காலம் முடிவடைந்திருந்தும் இல்லத்தினை மீளப்பெற்றுக்கொள்வதற்கும் வாடகை நிலுவையினை அறவிடுவதற்கும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	விடுதியைக் கையளிக்குமாறு பயங்கரவாத விசாரணை திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தருக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதற்கிணங்க வாடகை நிலுவையை செலுத்தி விடுதியை கையளிக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.	சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இல்லத்தினை மீளப்பெற்றுக்கொள்வதற்கும் வாடகை நிலுவைகளை அறவிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
	(iii) XIX இன் பிரிவு 7:2	386,606	வவுனியா மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான அரச இல்லத்தில் வசித்து வந்த வவுனியா மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் கிளையில் கடமையாற்றி 2021 பெப்ரவரி 22 ஆம் திகதி ஓய்வு பெற்ற பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரின் வாடகை மற்றும் தண்டங்களின் நிலுவையினை அறவிடுவதற்கு கடந்த 04 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	குத்தகைக்காலம் கடந்து அரச விடுதியில் வசித்த காலப்பகுதிக்குரிய தண்டப்பணமானது கணிக்கப்பட்டு அவரினது கொடுப்பனவு நிலுவையிலிருந்து அறவிடப்பட்டு மேலதிக நிலுவயானது அவரது ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு ஓய்வூதிய திணைக்களத்திற்குக் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.	ஓய்வூதிய கொடுப்பனவுகளை விரைவுபடுத்த வேண்டியதுடன் வாடகை மற்றும் தண்டங்களின் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	**2007 ஏப்ரல் 20 ஆந் திகதிய 22/2006 இலக்கமிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை**	244,283	வவுனியா மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான அரச இல்லமொன்று 2020 செப்டெம்பர் 09 ஆம் திகதியன்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தபோதிலும் குறித்த இல்லத்திற்கான வாடகை நிலுவையினை அறவிடுவதற்கு கடந்த 02 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வாடகை நிலுவை தொடர்பாக கடிதங்கள் அனுப்பப்பட்டும் நிலுவையை செலுத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை ஆகையால் தற்பொழுது பாராளுமன்ற உறுப்பினரினருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.	சட்ட நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு உரிய வாடகை நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**4.		செயற்பாட்டு மீளாய்வு**

**4.1		செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பிரதேச செயலகப் பிரிவுகளில் வசித்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள காணியற்ற நபர்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் தற்பொழுது காணிக்கு தகமையுள்ள எனினும் சட்டரீதியான உரிமை இல்லாத நபர்களுக்கு முறைப்படியான அதிகாரப் பத்திரத்தினை வழங்குவதற்காக காணி ஆணையாளர் நாயகத்தின் 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/04 ஆம் இலக்க காணி முகாமைத்துவத்தை முறைமைப்படுத்துவதற்கான சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலாளர்களால் காணிக் கச்சேரியினை நடாத்தி காணிகள் சம்பந்தமான சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் பிரதேச செயலகப் பிரிவின் 100 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இருந்து காணிக் கச்சேரிக்காக 9,713 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற நிலையில் 01 தொடக்கம் 10 வருடங்களுக்கு மேலாக காணி கச்சேரியினை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கூடிய விரைவில் காணிக்கச்சேரி நடாத்தி காணிப்பத்திங்களை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.	நடைமுறையிலுள்ள சட்ட கட்டமைப்புகளுக்கு ஏற்றவாறு காணிச் கச்சேரிகள் முறையாக நடாத்தப்பட்டு பொது மக்களின் காணி தொடர்பான பிரச்சனைகளை தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	பொது மக்களுக்கு வழங்க வேண்டிய 1,985 எண்ணிக்கையான அனுமதிப் பத்திரங்கள் (Permits) மற்றும் 1,524 எண்ணிக்கையான அளிப்புப் பத்திரங்களை (Grants) உரியவர்களுக்கு வழங்குவதற்கு 04 பிரதேச செயலகங்களினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இவை 1982 தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் தயாரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டிருந்தது.	07 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன கையிருப்பில் உள்ள அளிப்பு பத்திரங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்களை உரியவர்களுக்கு வழங்குவதற்கு தொடர் நடவடிக்கை எடுப்பதுடன் உரிமையாளர்களை இணங்காண முடியாதுள்ள அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சரியான உரிமையாளர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் மற்றும் அளிப்புப் பத்திரங்களை வழங்குவதற்கும் உரிமையாளர்களை அடையாளம் காணமுடியாத அளிப்பு பத்திரங்களை முறையான விசாரணைகளை மேற்கொண்டு இரத்து செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் ரூபா 291.6 மில்லியன் மதிப்பீட்டில் [illegible] வவுனியா பொருளாதார மத்திய நிலையம் தற்போது வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ளது. 2018 இல் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து மாவட்டச் செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 31 திசெம்பர் 2024 வரை அமைக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 2018 தொடக்கம் 2024 வரை பாதுகாப்புச் சேவைக் கட்டணம், சுத்திகரிப்புச் செலவுகள் மற்றும் நீர்க்கட்டணங்களுக்காக ரூபா 14.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	பொருளாதார மத்திய நிலையத்தினை திறப்பதற்கான வேறு நடவடிக்கைகள் அதற்குறிய அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய தற்போது எம்மால் முன் எடுக்கப்பட்ட போதும் அமைச்சின் அனுமதி இதுவரை கிடைக்கப்பெறவில்லை. மத்திய நிலையத்தினை பராமரிப்பு செய்து கொண்டு நடாத்துவதற்காகவே பாதுகாப்புச்சேசை செலவுகள், சுத்திகரிப்புச் சேவைச் செலவுகள் மற்றும் மின்சாரப் பட்டியல்களுக்குரிய செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றது.	நலன்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளும்வ கையில் பொருளாதார மத்திய நிலையத்தை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் அதனை செயல்படுத்த தவறியவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.3 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் விடல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பறன்நட்டகல் முன்பள்ளி கட்டட கட்டுமான வேலையானது 2019 டிசம்பர் 06 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2025 மே 28 வரை நிறைவுபடுத்தப்படாமல் உள்ளதுடன் இவ்வேலைக்காக ரூபா 1,551,712 செலவழிக்கப்பட்டிருந்த போதும் பூரணப்படுத்தப்படாமையால் இச்செலவினம் ஓர் வீண்விரயமாக காணப்பட்டிருந்தது.	குறித்த காலத்திற்குரிய கட்டுநிதி குறித்த நிதியாண்டு காலப்பகுதியில் கிடைக்கப்பெறாமையால் இத் திட்டமானது கைச்சாத்திடப்பட்ட தினத்தில் பூரணப்படுத்த முடியாமல் போனது என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன்.	கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். பணியை முறையாக முடிக்கத் தவறியதற்குப் பொறுப்பான தரப்பினரைக் கண்டறிந்து, கடமையில் ஏதேனும் தவறு இருந்தால், அதற்கு எதிராகத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீள்குடியேற்ற, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சினால் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 1 மில்லியன் மற்றும் ரூபா 0.6 மில்லியன் வீட்டுத்திட்டங்களில் 06 மற்றும் 03 எண்ணிக்கையான வீட்டுத்திட்ட பயனாளிகளின் வேலைகள் நாளதுவரை முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருக்காத போதிலும் கொடுப்பனவுகள் முழுமையாக அவர்களது வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டு, பணம் மீளப்பெற முடியாதவாறு ரூபா 1,396,000 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.	குறித்த வீட்டுத்திட்டத்திற்கான நிதி பல்வேறு காரணங்களுக்காக தாமதமானதால் அவ் வீட்டுத்திட்டம் குறித்த காலத்தில் நிறைவடையவில்லை. தற்பொழுது வேலைகள் நடைபெற்று வருவதால் 30.06.2025க்கு முன்னர் அனைத்து வேலைகளையும் நிறைவேற்றி பணம் விடுவிக்கப்படும்.	முழுமையாக கட்டப்படாத வீடுகளுக்கு பணம் செலுத்துவதற்கு பரிந்துரைகளை வழங்கிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் கட்டுமான முன்னேற்றத்திற்கு ஏற்ப அமைச்சின் வழிகாட்டுதலின் பிரகாரம் பயனாளிகளுக்கு நிதி விடுவிக்கப்படவும் வீட்டுத்திட்டத்தினை உரிய காலத்தில் பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

4.5 உள்நாட்டு நிதியுதவித் திட்டங்களிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய அலுவலக கட்டட புணரமைப்பு வேலையானது மாவட்டச் செயலகத்தினால் 6 ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் ரூபா 23,075,278 செலவில் 14 நொவெம்பர் 2023 தொடக்கம் 06 ஒக்டோபர் 2024 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வேலை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(i)	ஒரு ஒப்பந்த வேலை 2024 ஆகஸ்ட் 07 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டு தவறான பரிந்துரையின் மூலம் ரூபா 300,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2025 ஜனவரி 07 ஆம் திகதி வரை வேலை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.	தற்போது மேற்படி குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதுடன் மேற்படி அலுவலகம் அவசரமாக திறக்கவேண்டி இருந்தமையாலும் நடைபெற்றுக்கொண்டிருந்த அலுவலகத்திலிருந்து பொருட்கள் கழற்றி கொண்டுவந்து புதிய அலுவலகத்தில் பூட்டவேண்டி இருந்தமையாலும் பின்வேலி வேலை மற்றும் வெளிப்புற அலுவலர் மலசலகூட வேலை என்பன அடுத்த ஆண்டு ஒதுக்கீடு பெற்று கொடுப்பனவு செய்வதாக	BOQ இல் குறிப்பிடப்பட்டுள்ள விபரகுறிப்புக்கு அமைவாக வேலைகள் நிறைவேற்றப்பட்ட பின்னரே கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் தவறான பரிந்துரையினை வழங்கிய உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை

		ஒப்பந்தகாரருடன் கதைக்கப்பட்டதன் பேரில் ஒப்பந்தகாரரால் செய்து தரப்பட்டது. இதனாலேயே எம்மால் மேற்படி வேலைகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பாடமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. இருந்தபோதிலும் மிகுதி வேலைகளுக்கு இதுவரை எம்மால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை.	எடுக்கப்படல் வேண்டும்.
(ii)	ஒரு ஒப்பந்த வேலைக்கான பொருட்கள் கொள்வனவு கொடுப்பனவுகளின் போது Schedule of rate புத்தகத்தில் காணப்படும் கட்டணத்திற்கு முரணாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருப்பதினால் ரூபா 91,612 மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	மேற்படி தங்களின் கணிப்பு முறையில் சிறிய குறைபாடு உள்ளது என்பதை அறியத்தருவதுடன் சரியாக அதைக் கணிப்பிட வேண்டுமாயின் VAT கணிப்பிட்டு Rate கூட்டப்படல் வேண்டும். அதேபோல திணைக்களம் Supervision மற்றும் Bill preparation செய்யும்போது மட்டுமே சமுகமட்ட சங்கங்களுக்கு Over head குறைக்க முடியும் என்பதை அறியத்தருகின்றேன்.	மேலதிக கொடுப்பனவை அறவீடு செய்ய முறையான விசாரணை நடாத்தப்பட வேண்டியதுடன் தவறான பரிந்துரை வழங்கியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.
(iii)	ஓப்பந்த வேலையின் பிரகாரம் 600*600 size ceramic tiles பதிக்கப்பட்டுள்ள போதிலும் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது 600*600 homogenous tiles இன் பெறுமதி பயன்படுத்தப்பட்டமையால் ரூபா 32,207 மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	எம்மால் கோரப்பட்ட Tiles இற்கு Schedule Rate இல்லாமையால் அதற்கு எம்மால் Rate analysis செய்யப்பட்டு Rate போடப்பட்டது. அத்துடன் எம்மால் Homogenous Corclain polished floor tiles போடுமாறு கோரப்படவில்லை என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.	-மேற்படி-
(iv)	ஒரு ஓப்பந்த வேலையின் item No 16 இன் படி supper flex suspended ceiling ற்கு பதிலாக gypsum ceiling sheet பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	Supper Flex suspended ceiling இனை விட Gypsum ceiling பெறுமதி கூடியது ஆகும், இதனால் மேற்படி கொடுப்பனவுகளில் நிதி இழப்பீடு ஏதும் ஏற்படவில்லை என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.	கட்டுமான பணிகள் பொறியியலாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும்.

4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
(அ)	வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகத்திற்கு உரித்தான 05 எண்ணிக்கையான வாகனங்களினை பயன்படுத்துவதற்கு கடந்த 02 தொடக்கம் 12 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கைகள்	05 வாகனங்கள் பாவனைக்குட்படுத்த கூடிய நிலையில் காணப்படாமையினால் அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.	முறையான விசாரணைகளை மேற்கொண்டு பாவனைக்குட்படுத்த முடியாத சொத்துக்களை அகற்ற நடவடிக்கைகள்

	மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான 03 எண்ணிக்கையான அரச இல்லங்கள் பாவனைக்குட்படுத்தக்கூடிய வகையிலும் 02 எண்ணிக்கையான அரச இல்லங்கள் திருத்தி பாவனைக்குட்படுத்தக்கூடிய வகையிலும் காணப்படுகின்ற நிலையில் கடந்த 04 தொடக்கம் 06 வருடங்களுக்கு மேலாக பாவனைக்குட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததால் காத்திருப்போர் பட்டியலில் காணப்படும் 90 குடும்ப விடுதி கோரிக்கையாளர்கள் விடுதிகளினை பெறும் வாய்ப்பினை இழந்துள்ளனர்.	03 விடுதிகளினை அட்டவணைப்படுத்தப்பட்ட விடுதியாகவும் 02 விடுதிகளினை திருத்தம் செய்து பாவனைக்குட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	அரச இல்லங்களை திருத்தி பாவனைக்குட்படுத்தவும் தற்போது பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் இல்லங்களை காத்திருப்போர் பட்டியலில் உள்ள தகுதியானவர்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.7 அரச உத்தியோகத்தர்களி பிணை வைப்பு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2022 மார்ச் 16 ஆம் திகதிய 04/2022 இலக்கமிடப்பட்ட சுற்றிக்கையின் பிரகாரம் பிணைப்பணம் செலுத்த வேண்டிய மாவட்ட செயலகத்தின் 10 உத்தியோகத்தர்கள் பிணைபணம் செலுத்துவதற்கு தவறியிருந்தனர்.	வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் 04 அலுவலர்களால் பிணைப்பணம் செலுத்தப்படடுள்ளதுடன் ஏனைய உத்தியோகத்தர்களுக்கான பிணை வைப்புகளைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன	சுற்றறிக்கையின் பிரகாரம் பிணைப்பணத்தினை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.8 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	வவுனியா மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான அரச இல்லங்களின் வாடகை நிலுவைகள் ரூபா 309,068 இனை அறவிடுவதற்கு கடந்த 02 தொடக்கம் 05 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தொடர்புடைய திணைக்களத்தினால் வாடகை நிலுவையை சீர் செய்யப்படுமென எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 08 New In பதிவாளரினால் குறித்த வாடகை நிலுவையை சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்குரிய கடிதப்பிரதியானது எமக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினருக்கெதிராக தற்பொழுது சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.	குறித்த காலப்பகுதியில் நிலுவைகளை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன் நிலுவையினை அறவீடு செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ)	வவுனியா பிரதேச செயலகத்தினால் அரச காணிகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்கியமை தொடர்பில் அறவிட வேண்டிய குத்தகை தவணைப் பணம் மற்றும் குற்றப்பணம் ரூபா 33,494,996 இனை அறவிடுவதற்கு கடந்த 01 தொடக்கம் 47 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குத்தகை நிலுவை தொடர்பில் காணி ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக முன் ஆயத்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	குத்தகை மற்றும் குற்றப்பணத்தினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன் குத்தகை மற்றும் குற்றப்பணத்தினை அறவீடு செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	வவுனியா வடக்கு பிரதேச செயலகம் மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவின் கீழ் காணப்படுகின்ற 02 ஓய்வூதியர்களுக்கு மிகையாக செலுத்திய ஓய்வூதியப் பணம் ரூபா 201,440 இனை கடந்த 11 தொடக்கம் 23 மாதங்களுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவல்லை.	ஏ. ஏ. மயில்வாகனம் என்பவருக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட தொகையில் ரூபா 15000 இனை அவரது மகளிடம் இருந்து மீள அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதியினை மகளின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் குறித்த ஒரு தொகையினை கழிப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் மேலதிகமாக வழங்கப்பட்டு மீள அறவிடப்பட்ட தொகைகள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது. மற்றைய ஓய்வூதிய தாரருக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட தொகையை செலுத்துவதாக ஒப்புக்கொண்டு உறவினர்களால் தவணைப்பணமாக ரூபா 5,000 செலுத்தப்பட்டுள்ளது முழுமையாக அறவீடு செய்யப்பட்டதன் பின்னர் ஓய்வூதியத் திணைக்கத்திற்கு மீளளிப்பு செய்யப்படும்.	மேலதிக கொடுப்பனவிற்கு உத்தியோகத்தர்கள் பொறுப்பெனில் முறையாக விசாரணை மேற்கொண்டு பொறுத்தமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன் ஓய்வூதிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் மேலதிக கொடுப்பனவுகளை அறவீடு செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் இறுதிவரையில் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் பதவியணியில் 57 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஆளணி வெற்றிடங்களினை மாகாண சபைகள் மற்றம் உள்ளுராட்சி அமைச்சினாலேயே நிரப்பீடு செய்யப்படுகின்றது. எவ்வாறாயினும் ஆளணி வெற்றிடங்கள் இதுவரை நிரப்பீடு செய்யப்படவில்லை.	ஆளணிக்கான மதிப்பாய்வை மேற்கொண்டு அத்தியாவசிய சேவைகவைக்குரிய உத்தியோகத்தர்தளை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.